<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 17.11.2025, அ.வ.எண். 237/2020, வா.சா.2.ஜெயந்தி, க/பெ. ரவிக்குமார்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) குருவம்மாள் வாங்கிய சொத்தின் அமைப்பு எப்படி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் முன் பக்கம் கிழக்கு பார்த்து வில்லை வீடு, மேபுறம் காலியிடம் அதற்கடுத்து நாச்சிமுத்து செட்டியார் வீட்டிற்கும் காலியிடத்திற்கும் கிழக்கில் எங்கள் வீடு, வடக்கில் வீடு, தென்புறம் வீதி அமைந்து உள்ளது. நான் மேலே சொன்ன அமைப்பில் தான் குருவம்மாள் வாங்கிய சொத்தின் அமைப்பு உள்ளது என்றால் சரிதான். எங்களது சொத்திற்கு தொட்டாற்போல் மேபுறத்தில் பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்றால் இல்லை,

2) அதே போல் வடபுறத்தில் பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்றால் வீடு உள்ளது. நான் கேட்டுள்ள பரிகாரம் எனது சொத்திற்கு மேபுறமும், வடபுறமும் பூசிக்கொள்வதற்கான தடம் உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தடம் உள்ளது என்றும் அதில் எங்களுக்கு உரிமையுள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் ஏதேனும் குறிப்பாக பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்களுடைய சொத்திற்குள்ளேயே அந்த இடம் உள்ளது. மேபுறமும், வடபுறமும் பிரதிவாதிகள் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் அது அவர்களுடைய இடம் கிடையாது.

3) பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் புல வரைபடத்திலேயே எங்களுடைய இடம் என்று குறிப்பிட்டுள்ளது. மேற்படி விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். புல வரைபடத்திற்குள் எங்களுடைய சொத்து

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

வருகிறது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னநாச்சிமுத்து செட்டியார் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். சின்னநாச்சிமுத்து செட்டியாரின் வாரிசுகள் 3 பெண் மக்கள், 2 ஆண்மக்கள் என்றால் சரிதான். சின்னநாச்சிமுத்து செட்டியாரின் வாரிசுகளை கட்சி சேர்க்காமல் தாவா தாக்கல் செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி ஆண் மக்களுக்குதான் அவரது பாட்டி உயில் எழுதி வைத்ததாக சொன்னதால் அவர்களை மட்டும் தரப்பினராக சேர்த்தேன். மேற்படி சொத்து எங்களது வீட்டிற்கு எந்த திசையில் அமைந்துள்ளது வடபுறத்தில் அமைந்துள்ளது.

5) மேபுறத்தில் சின்னநாச்சிமுத்து செட்டியாருக்கு சொத்து பாத்தியம் என்றால் இல்லை. அவரது வாரிசுகளுக்கும் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். சொத்திற்கு மேபுறம் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. பத்திரத்திற்குள் உள்ள அளவுகளுக்கு கட்டுப்பட்ட சொத்து தான் எங்களது என்றால் சரிதான். மேற்படி அளவு குறித்த பட்டா உள்ளது என்றால் சரிதான். அதை ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்முன் காட்டப்படும் பட்டாதான் எங்களுக்கான சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். ஆனால் அதிலுள்ள அளவுகள் மாறுபட்டுள்ளது. **மேற்படி பட்டா நகல் பி வா சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) பி வா சா ஆ 1 ற்கான வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

ஒப்பம்/-(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தாக்கல் செய்துள்ளேன். அது போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பி வா சா ஆ 1ல் குறைபாடு உள்ளது என்று கூறியுள்ள நிலையில் அதைநிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைஏதேனும் எடுத்தேனா என்றால் எடுத்தேன். வழக்கு நிலுவையில் உள்ளதால் தற்போது எந்த மாற்றமும் செய்யமுடியாது என்று வருவாய்துறையினர் கூறிவிட்டார்கள். அவ்வாறு நடவடிக்கை எடுத்ததற்கான ஆதரவுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இதுநாள் வரை அது போன்ற ஆவணங்கள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) மேற்படி விவரங்களை எனது தாவா பிராதிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். அதற்கு மறுப்பு தெரிவித்து பதில் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கை பத்தி 8 பக்கம் 4ல் கூறியுள்ள விவரங்கள் சரி என்றால் சரிதான். யாருக்குமே பாத்தியம்இல்லை என்றுமேற்படி பிரமாண பத்திரிக்கையில் கூறிவிட்டு எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எதனடிப்படையில் கூறுகிறேன் என்றால் 2005 ம் ஆண்டு தீர்ப்பில் அளவுகள் குறிப்பிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8) 2005 ம் ஆண்டு வழக்கு யாருக்கிடையே நடைபெற்றது என்றால் எனது அம்மா, மற்றும் அவரது சகோதரிக்குள் நடைபெற்றது ஆகும். மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் எங்களது சொத்திற்கு மேபுறமும், வடபுறமும் உள்ள

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சுவற்றிற்கு பூசிக்கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மேற்படி தீர்ப்பினை இவ்வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். 2015 ம் ஆண்டில் தாவா சொத்திற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெற்ற வரைபடத்தையும் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எனது அம்மா, மற்றும் அவரது சகோதரிக்குள் நடைபெற்ற வழக்கில் இந்த பிரதிவாதிகள் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பு இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல கட்டுப்படுத்தும்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி